மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வி நேரத்திலும், ஒற்றிவைப்புப் பிரச்னையைப்பற்றி எண்ணிக்கொண்டிருப்பது கூடாது. நான் சொன்னது இலாக்கா அதிகாரிகள் இதைப்பற்றி அவ்வப்பொழுது ஏற்படுகின்ற அனுபவங்களைப் பார்த்துக் கூடிப் பேசி முடிவு செய்வார்கள் என்பதுதான். இது விவாதத்திற்கே உரிய பிரச்னை அல்ல. நடைமுறைப் பிரச்னை, நிருவாகம் ஆராய்ந்து செயல்படுத்தக்கூடிய பிரச்னை ஆகும்.

கிராமப்புறங்களில் பொதுச் சுடுகாடுகள்.

*182 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் பொதுச் சுடுகாடு ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசிலித்து வருகின்றதா ?

(இ) ஆம் எனில், உள்ளாட்சி மன்றங்களே அவற்றை நடத்து வதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பல கிராமங்களிலே இம்மாதிரிப் பொதுச் சுடுகாடுகள் இல்லாத காரணத்தினாலே சாதிச் சண்டைகள் மூண்டு வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு பொதுச் சுடுகாடுகளை அந்தந்த இடங்களில் ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய முறையிலே ஆங்காங்குள்ள உள்ளாட்சித் துறையினருக்கு அரசு உரிமை அளிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கிராமத்திற்கு ஒரு சுடுகாடு தேவை என்ற அடிப்படையில் அது சுடு காடாக இருந்தாலும் இடுகாடாக இருந்தாலும் தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சி மன்றச் சட்டத்தின்படி 63-வது பிரிவு உட்பிரிவின்கீழ் அதிகாரம் அதற்காக வழங்கப்பட்டிருக்கிறது. பொதுச் சுடுகாடு என்பது இரண்டு கிராமங்களுக்கும் சேர்த்து இரண்டு ஊராட்சிகளுக்கும் சேர்த்து அமைக்கப்படுவது ஆகும். சாதிச் சண்டைகள் என்பது சுடுகாட்டிலேயே எரிந்துபோக வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகின்றது.

1973 பிப்ரவரி 28]

திருமதி த. ந. அனந்தநாயகி : எலக்ட்ரிக் கிரிமெட்டோரியம் ஆங்காங்கு ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மின்சார வெட்டு, சுடு காட்டிலேயும் நெருக்கடியை உண்டாக்க வேண்டாம் என்று அரசு கருதுகிறது.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, கிராமங்களிலே உயர்ந்த சாதிக்காரர்களுக்கு ஒரு சுடுகாடு, தாழ்ந்த சாதிக்காரர் களுக்கு ஒரு சுடுகாடு, இடையிலே இருக்கிறவர்களுக்கு ஒரு சுடு காடு என்று இருக்கிறது. இந்த முறையை மாற்றியமைத்து அங்கேயும் சமதர்மத்தை ஏற்படுத்துகிற முறையிலே ஒரே சுடுகாடு ஏற்படுத்தி, எல்லாச் சாதிக்காரர்களும் அங்கேயேதான் பிணங்கள் எரிக்க வேண்டுமென்ற முறையைக் கொண்டுவர அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஊராட்சி மன்றங்களும் நகராட்சி மன்றங்களும் அந்த அந்த ஊர்கள், நகரங்கள் ஆகிய வற்றின் இயல்புகேற்ப அவர்கள் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். ஒரே இடத்திலே வைக்க வேண்டுமென்று சொல்லி ஒரே ஒரு குழியைத் தோண்டச் செய்யவோ அல்லது ஒரே ஒரு எரிப்பு இடம் ஏற்படுத்தவோ முடியாது. 3, 4 இடங்கள் இருக்க லாம். அப்படி இருந்தால்தான் ஒரே நேரத்திலே 2, 3 சடலங்கள் வந்தாலும் அவரவர்களுக்கு வசதிகள் கிடைக்கும். சாதிச் சண்டை கள் ஏற்படுகின்ற நிலைமையைச் சமுதாயப் பழக்கமும் நல்ல எண்ணமும்தான் மாற்ற வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, ஏற்கனவே இந்த எலெக்ட்ரிக் கிரெமேட்டோரியம் இருந்ததா? அது இப் பொழுது இயங்குகிறதா? இருந்து எடுக்கப்பட்டது என்றால் அதை எடுப்பதற்கு என்ன விசேஷ காரணங்கள் இருந்தன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இருக் கிறதா, இல்லையா என்பதைப்பற்றி எனக்கும் தெரியாத நிலையில், மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கும் தெரியாத நிலையில் இந்தக் கேள்வி எழுகிறது. தனிக் கேள்வி போட்டால் விசாரித் துக் கூறலாம். இருந்தது எதுவும் எடுக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுடுகாட்டைப் பற்றியா இவ்வளவு நேரம், அதுவும் காலை நேரத்திலா பேசுவது?

ஹார்வி மில்லிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர்.

* *183* **வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் :** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

அம்பாசமுத்திரம், ஹார்வி மில் சாயப்பட்டறையின் கழிவு நீர் (கெமிகல்ஸ்) தாம்பரபரணி நதியில் சேர்க்கப்படுவதைத் தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சட்டப்பேரவைமுன் விவரமான அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Pultry Breeders Marketing Society, Madras.

* 184 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether the Government have given any assistance for the starting of the Poultry Breeders Marketing Society in Madras City ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) பேரவை முன் விவரமான அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

THIRU N. DENNIS : May I know whether there is any proposal under the consideration of the Government to start such societies in the rural areas also?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, already there are so many co-operative societies which are formed in the rural areas and the Department itself are facilitating marketing of eggs produced by such societies. In the Madras City and its surrounding

---

@ 261–265-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* 266–267-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.